**Copy of Deposition**

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.

MCOP.No.27/2024 நாள்:13.03.2026

ம.சா:–1 விவேகானந்தன் ஆஜர் சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்கு விசாரணை(3 மற்றும் 4 எதிர் மனுதாரர்கள் தரப்பில்):–

திருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டத்தின் படி இந்த மனு விபத்து நடந்த 6 மாத காலத்திற்குள் தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றும் அவ்வாறு உரிய காலத்திற்குள் இந்த மனு தாக்கல் செய்யப்படாததால் காலவரையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிர் மனுதாரருக்கு வாகன விபத்தின் போது ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் யமாஹா TN 82 M 4991 வண்டிக்கு உரிய RC மற்றும் FC செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அந்த வாகனம் புதிய வாகனம். இறந்து போன மாணிக்கம் 07.07.2023ம் தேதி அன்று மதியம் 2.00 மணி அளவில் வள்ளியம்பாளையம்– சின்னதாண்டாம் பாளையம் ரோட்டின் இடதுபுறமாக சாலை விதிகளை பின்பற்றி நின்று பார்த்து ரோட்டை கடக்க முயன்ற போது 1ம் எதிர் மனுதாரர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும், வடக்கே இருந்து தெற்கு நோக்கி வந்து மாணிக்கம் ஓட்டி வந்த வண்டியின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்பது பொய் என்றால் சரியல்ல. மாணிக்கம் தான் திடீரென்று ரோட்டை கடக்க முயற்சி செய்தபோது வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று மாணிக்கத்தின் கவனக்குறைவால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்தினால்தான் மாணிக்கம் இறந்ததாக கூறி பொய்யான மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மாணிக்கத்தின் வயது விபத்தின்போது 72 என்பதற்கும் அவர் விவசாயம் செய்து வந்தார் என்பதற்கும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் விவசாய பூமிக்கு உண்டான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். மாதம் ரூ.50,000/– சம்பாதித்து வந்தார் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் விவசாய வருமானத்திற்கு ஆவணம் தாக்கல் செய்ய இயலாது. 1ம் எதிர் மனுதாரருக்கு ஓட்டுனர் உரிமம்

## Copy of Deposition

இல்லாததால் 3 மற்றும் 4 எதிர் மனுதாரர்கள் எவ்வித இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றாலும், 1ம் எதிர் மனுதாரர் தான் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. நாங்கள் கோரியுள்ள இழப்பீட்டு தொகை அதிகமானது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை:– இல்லை

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2026.03.13 15:02:46 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |